www.Padasalai.Net www.TrbTnpsc.com

K. Johnsi
Coimbatore

A

# இரண்டாம் பருவத் தேர்வு -2024
## தொகுத்தறி மதிப்பீடு - தமிழ்

வகுப்பு : 7

மதிப்பெண்கள் : 60
காலம் : 2.00 மணி

### பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (6×1=6)

1. தன்குடியைச் சிறந்த குடியாகச் செய்ய விரும்புபவரிடம் ______ இருக்கக் கூடாது.

அ) சோம்பல் ஆ) சுறுசுறுப்பு இ) ஏழ்மை ஈ) செல்வம்

2. தொல்காப்பியம் கடற்பயணத்தை ______ வழக்கம் என்று கூறுகிறது.

அ) நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ) கண்ணீர்

3. ______ பெயர் என்ன?

அ) நீ ஆ) நாம் இ) நான் ஈ) உன்

4. தன்+நெஞ்சு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் எது?

அ) தன்நெஞ்சு ஆ) தன்னெஞ்சு
இ) தானெஞ்சு ஈ) தனெஞ்சு

5. பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம் என்று பாடியவர் யார்?

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) திருக்குறளார் ஈ) திருவள்ளுவர்

6. எல்லார்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொல் எது?

அ) இயற்சொல் ஆ) திரிசொல்
இ) திசைச்சொல் ஈ) வடசொல்



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

பொருத்துக. (4×1=4)

7. கழனி – கதிரவன்
8. நிகர் – மேகம்
9. பரிதி – சமம்
10. முகில் – வயல்

## பகுதி–II பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக. (4×2=8)

11. நாவாயின் தோற்றம் எவ்வாறு இருந்ததாக அகநானூறு கூறுகிறது?
12. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.
13. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும்?
14. பாரதிதாசனின் மனத்தைக் கவர முயன்ற இயற்கைப் பொருள்கள் யாவை?
15. நன்மை செய்வதிலும் தீமை உண்டாகும் எப்போது?
16. எவற்றைக் கொண்டு தாள் ஓவியங்களை வரைவர்?

## பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக. (5×2=10)

17. பண்டிகை, கேணி என்பன எவ்வகைச் சொற்கள்? விளக்குக.
18. கலைகள் சார்ந்து உங்கள் பொறுப்புகள் இரண்டு எழுதுக.
19. விடுதல் தொழிற்பெயர் எனில், முதனிலை திரிந்த தொழிற்பெயரை எழுதுக.
20. பகுபத உறுப்புகளில் காலத்தைக் காட்டுவது எது?
21. கலைச்சொல் தருக.
    அ) Marine Technology ஆ) Inscriptions
22. இடைச்சொல்லைச் சேர்த்துத் தொடரை எழுதுக.
    அ) புல் தின்றது. ஆ) பாடல் பாடினாள்.
23. இருபொருள் தருமாறு தொடரில் அமைத்து எழுதுக.
    மாலை



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

## பகுதி – III

அடிபிறழாமல் எழுதுக. (2+3=5)

24. 'எண்ணித் துணிக" எனத் தொடங்கும் திருக்குறள்.

25. அ) "வைப்புழிக் கோட்படா" எனத் தொடங்கும் அழியாச் செல்வம் பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) "கட்டி அடிக்கையால்" எனத் தொடங்கும் கீரைப்பாத்தியும் குதிரையும் பாடலை எழுதுக.

## பகுதி – IV

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக (3×3=9)

26. துன்பத்திற்குத் துன்பம் உண்டாக்குபவர் யார்?

27. 'இன்பத்தமிழ்க் கல்வி' பாடலின் மையக்கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

28. பாரதியார் முதன்முதலில் இதழ்களில் பயன்படுத்திய ஓவியத்தைப் பற்றிக் கூறுக.

29. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

சாலையில் வாகனங்களை இடப்புறமாகவே செலுத்த வேண்டும். இருவழிச் சாலையின் மையத்தில் விட்டுவிட்டுப் போடப்பட்டுள்ள வெள்ளைக்கோடு இரு போக்குவரத்துக்காகச் சாலை சரிசமமாகப் பிரிக்கப்பட்டுள்ளதைக் குறிக்கும். வாகனங்களை முந்துவதற்குக் கோட்டுக்கு வலது பக்கம் உள்ள சாலையைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதி உண்டு. இருவழிச் சாலையின் மையத்தில் தொடர்ச்சியாக வெள்ளை அல்லது மஞ்சள்கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக்கூடாது. இரட்டை மஞ்சள்கோடு வரையப்பட்டிருந்தால் முந்துவதற்கு எக்காரணம் கொண்டும் வலது பக்கச் சாலையைப் பயன்படுத்தக்கூடாது.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

அ) சாலையின் எந்தப் பக்கமாக வாகனங்களைச் செலுத்த வேண்டும்?

ஆ) விட்டுவிட்டுப் போடப்படும் வெள்ளைக்கோடு எதனைக் குறிக்கும்?

இ) எந்தக் கோட்டைத் தாண்டி வாகனங்களை முந்திச் செல்ல அனுமதி இல்லை?

## பகுதி – V

விடை எழுதுக. (1×6=6)

30. அ) உங்கள் பகுதியில் நூலகம் ஒன்று அமைத்துத்தர வேண்டி நூலக ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

அல்லது

ஆ) பின்வரும் குறிப்புகளைக் கொண்டு 'எங்கள் ஊர்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(முன்னுரை – அமைவிடம் – பெயர்க்காரணம் – தொழில்கள்– சிறப்புமிகு இடங்கள் – திருவிழாக்கள் – மக்கள் ஒற்றுமை – முடிவுரை)

## பகுதி – VI

விடை எழுதுக. (2×6=12)

31. அ) 'ஆழ்கடலின் அடியில்' கதையைச் சுருக்கி எழுதுக.

(அல்லது)

ஆ) மதிவாணன் பள்ளிக்குச் செல்ல முடிவெடுத்த நிகழ்வைச் சுருக்கி எழுதுக.

32. அ) நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால் எத்தகைய படைப்புகளை உருவாக்குவீர்கள்?

(அல்லது)

ஆ) நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவன யாவை?



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com